செ.வெ.எண்: 27 நாள்: 15.10.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வேலிக்கருவை மரங்களை அகற்ற சமூக ஆர்வலர்கள் முன்வர வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வேங்கை கண்மாயில் பாரத் மிகு மின் நிலையம் ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளை சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (15.10.2016) நடைபெற்றது.

இதில் மரக்கன்றுகளை நட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வேங்கை கண்மாய் சுமார் 80 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இதில் உள்ள வேலிக்கருவை மரங்களை பாரத் மிகு மின் நிலையம் ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளை, தாமரை ஆயக்கட்டு சங்கம், ரோட்டரி சங்கம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பங்களிப்புடன் இணைந்து முழுவதுமாக அகற்றப்பட்டுள்ளது. இக்கண்மாயில் பொதுமக்களுக்கு பயன்பெறும் மரக்கன்றுகள் மற்றும் மரப்போத்துக்கள் நடப்படுவதுடன் 5000 பனை விதைகளும் விதைக்கப்பட்டுள்ளது. இந்த மரக்கன்றுகளை தினமும் உரிய முறையில் நீர் ஊற்றி பராமரிக்க மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

மேலும் மாண்புமிகு உயர் நீதிமன்றம் உத்தரவின்படி நமது மாவட்டத்திலுள்ள அனைத்து வேலிக்கருவை மரங்களும் அகற்றும் பணி போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது. இதே போன்று அனைத்து சமூக ஆர்வலர்களும் தங்களது பகுதிகளிலுள்ள வேலிக்கருவை மரங்களை முழுவதுமாக அகற்ற முன்வர வேண்டும். இதன் மூலம் வேலிக்கருவை அகற்றிய பகுதிகளில் மக்களுக்கு பயன்தரும் வகையில் நல்ல மரக்கன்றுகளை நட்டு வளர்த்து காடுகளின் பரப்பளவை அதிகரிக்க செய்து மழைப்பொழிவை பெருக்கி நமது மாவட்டத்தை பசுமை மாவட்டமாக மாற்ற அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மறைந்த முன்னாள் குடியரசுத்தலைவர் பாரத ரத்னா டாக்டர்.ஏ.பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் 85வது பிறந்த நாளினை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் வட்டாட்சியர் திரு.கபிரியேல்சார்லஸ், வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.வேலு, பாரத் மிகு மின் நிலைய ஊழியர்களின் சமூக சேவை அறக்கட்டளை சங்கத்தலைவர் திரு.ஆனந்தன், செயலர் திரு.முத்துராமன், ஊராட்சி மன்றத்தலைவர் திருமதி.அன்பரசிஅடைக்கன், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**